**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**<u>OS.No.119/2021</u>**

தேதி: 07.08.2025

பெயர் : சண்முகம் (வா.சா.1) த/பெ: ராமசாமி

**<u>குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

1. வழக்கில் 2 அயிட்ட சொத்துக்களையும் பூர்வீக சொத்துக்கள் எனக்கூறி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கில் 2 வது அயிட்ட சொத்துக்கு மட்டும் பட்டா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1 வது அயிட்ட சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1 வது அயிட்ட சொத்தில் வீடு உள்ளது. 1 வது அயிட்ட சொத்தை கிரையம் வாங்கியது 1 ம் பிரதிவாதியான எனது சகோதரர் என்றால் சரிதான். அந்த சொத்தை என்னுடைய தகப்பனார் ராமசாமி, தாயார் நல்லம்மாள் 06.07.1994 ம் தேதியில் கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. வழக்குரையில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்தேனா என்றால் கையெழுத்து போட சொன்னதால் போட்டேன், படித்து பார்க்கவில்லை. வழக்குரையில் 1 வது அயிட்ட சொத்தை பொறுத்து என் சகோதரர் 1 ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என தாவாவில் கூறியுள்ளேன் என்றால் அது பூர்வீக சொத்தாகும். அந்த சொத்தை காலிமனையாக 1 ம் பிரதிவாதி வாங்கினார் என்றால் அதில் வீடு இருந்தது, காலிமனையும் இருந்தது. அந்த வீட்டில் 1 ம் பிரதிவாதி வசித்து வீட்டுவரி செலுத்தி வருகிறார் என்றால் நானும், 1 ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் இருந்தோம். அந்த வீட்டில் 1 ம் பிரதிவாதி தான் குடியிருந்து வருகிறார் எனவும், வீட்டு வரி செலுத்திவருகிறார் எனவும், நான் சேர்ந்து குடியிருந்து வருவதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

2. 1 வது அயிட்ட சொத்தை 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதியான அவரது மனைவிக்கு செட்டில்மெண்ட் 09.02.2010 ம் தேதி எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால்

எனக்கு தெரியாது. காவல்நிலையம் சென்றபோதுதான் தெரியும். காவல்நிலையத்திற்கு எந்த வருடம் சென்றோம் என்றால் 2016ல் சென்றோம். அப்போது தெரிந்து கொண்டேன். அந்த ஆவணம் பூர்வீக சொத்து பொறுத்து எழுதப்பட்டிருப்பதாகவும், செல்லாது என நீதிமன்றத்தில் எதுவும் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அவர் தாக்கல் செய்த வழக்கிற்கு பதில் தாக்கல் செய்தேன். 1வது அயிட்ட சொத்தில் குடியிருந்து வரும் 1மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு நான் இடைஞ்சல் செய்து வருகிறேன் என்றால் இல்லை. நான் மேற்படி 2 பிரதிவாதிகளை இடைஞ்சல் செய்ததால் 2ம் பிரதிவாதி துறையூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS No.155/2016 என எண்ணில் இடைஞ்சல் செய்யக்கூடாது என வழக்கு தாக்கல்செய்திருந்தார் என்றால் சரிதான். ஆனால் நான் இடைஞ்சல் செய்யவில்லை. அந்த வழக்கில் தான் நான் பதில் மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு 2016 தொடர்ந்த பிறகு தான் 6வருடம் கழித்து நான் இந்த பாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு தாக்கல் செய்த காரணத்தினால் தான் இந்த வழக்கை பாகம் கேட்டு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. 1வது அயிட்ட சொத்து 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்து எனவும், அந்த சொத்தில் பாகம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. 1வது அயிட்ட சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதிதான் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் இல்லை, ஆளுக்கு ஒரு பகுதியில் உள்ளோம். அதனால் 1வது அயிட்ட சொத்தைபொறுத்து கூட்டு சுவாதீனத்தில் உள்ளதாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. கூட்டு சுவாதீனத்திற்காக நான் 1வது அயிட்ட சொத்தை பொறுத்து நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வழக்கில் எத்தனை பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 5 பாகத்தில் 1 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி என் சகோதரர், 3ம் பிரதிவாதி என் அம்மா, 4, 5 பிரதிவாதிகள் என் சகோதரிகள். பூர்வீக சொத்து என்றால் என் பாட்டனார் சொத்து. அப்பாவின் அப்பா சம்பாதித்தது. பூர்வீக சொத்தில் என் அம்மாவிற்கு எந்த பங்கும் கிடையாது, நான் கேட்டுள்ள பாக விகிதாச்சாரம் தவறு என்றால் சரியல்ல. 2வது அயிட்ட சொத்து பூர்வீக சொத்து, அந்த சொத்தை பொறுத்து

1ம் பிரதிவாதி என்னிடம் பாகம் கேட்டதால் நான் 1வது அயிட்ட சொத்தையும் சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2வது அயிட்ட சொத்தை பொறுத்தவகையில் பாகம் பிரித்து கொள்ள 1ம்பிரதிவாதிக்கு ஆட்சேபனை இல்லை எனவும், தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

(ஓம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்